**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 254/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | சீனிவாசராகவன் |
| Husband Name / Father's Name | சீனிவாசன் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of October 2019.

நான் தேனியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய அக்கா மகன் காணாமல் போனது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். நாளிதழில் விளம்பரம் செய்திருந்தோம். அது சம்பந்தமாக எனக்கு ஒரு நபர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடத்தி வைத்திருப்பதாக கூறினார். அந்த தொலைபேசி எண் எதிரியுடையதாக இருக்கும் என சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.1. பின்னர் விசாரித்து தெரிந்தபோது அந்த தொலைபேசி எண் வேறொரு நபருடையது என தெரிந்துகொண்டேன். காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டதாக மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையின்போது 11.09.2011ம் தேதி காலை 8.15 மணிக்கு 7871657598 என்ற எண்ணிலிருந்து உங்களுக்கு அழைப்பு வந்ததாகவும், அதில் 1 லட்சம் ரூபாய் கொடுக்கவில்லை என்றால் உங்களுடைய அக்கா மகனை கொன்றுவிடுவதாகவும் மிரட்டியதால் போலிசில் புகார் மனு அளித்துவிட்டு, விசாரணையிலும் கூறிவிட்டு, தற்சமயம் எதிரியுடன் சமாதானமாக செல்வதால் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.